Copy of Deposition

## சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

**அ.வ.எண். 107 /2024 நாள்:08.07.2025**

**வா.த.சா:- 1 பாஸ்கரன் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்):-**

நானும் இரண்டாம் வாதி வேலுசாமியும் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்கிறோம் என்றால் இல்லை. நாங்கள் இருவரும் கூட்டாக தாவா சொத்தை வாங்க முயற்சி செய்தோம் என்றால் ஆம். எங்களுக்குள் கூட்டு பத்திரம் எழுதி கொண்டோமா என்றால் இல்லை. எங்களுக்குள் கணக்குகள் வைத்திருந்தோம் என்றால் குறிப்பு எழுதி வைப்போம். என்னிடம் காட்டப்படுவது பிரதிவாதிக்கு பாதுகாப்பிற்காக நான் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணமா என்றால் அதில் உள்ள கையொப்பங்கள் மட்டும் என்னுடையது. நான் கையொப்பம் செய்து கொடுக்கும்பொழுது அவை வெற்று காகிதங்களாக இருந்தது. மேற்படி ஆவணத்தில் உள்ள 6 கையொப்பங்கள் என்னுடையதா என்றால் ஆமாம். அதில் வேலுசாமியின் 6 பக்கங்களில் 6 கையொப்பங்கள் இருக்கிறதா என்றால் ஆமாம். மேற்படி கையொப்பங்கள் மட்டும் பிவாசா வரிசை 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசா 1 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பே பிவாசா 1 கையொப்பங்களை செய்தேனா என்றால் ஆமாம். பிவாசா ஆவணத்தில் உள்ள கையொப்பங்களை பார்வையிட வேண்டும் என்று விண்ணப்பம் செய்து பார்வையிட்டேனா என்றால் ஆமாம். நான் பார்வையிட்ட பொழுது இந்த ஆவணம் உடன்படிக்கை ஆவணம் என்று ஆவண வடிவில் இருந்தால் ஆமாம். இதில் பிரதிவாதி கையொப்பமும் இருந்தால் சரிதான். வாசா ஆ 1 ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளும் முன்பு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்புக்கொன்றால் ஆவணம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். பேச்சுவார்த்தை முடிவில் பிரதிவாதிக்கு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக பிவாசா 1 வரிசை கையொப்பங்களை ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். பிவாசா 1 வரிசை கையொப்பங்களை கொண்ட ஆவணத்தில் தாவா சொத்தை ரூ.90 லட்சத்திற்கு கிரயம் செய்வதற்காக ஒப்புக்கொண்டதாக கையொப்பம் செய்துள்ளதாக ஆவணத்தில் கண்டுள்ளதாக இருக்கிறது என்றால் சரிதான். வாசா 1 ஆவணத்தின் படி தாவா சொத்தை 6

லட்சத்திற்கு கிரயம் வாங்குவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 90 லட்சத்திற்கு பதிலாக 6 லட்சத்திற்கு கிரயம் எழுதினால் முத்திரை தாள் மற்றும் வருமான வரி கிரய செலவு குறைவு என்றால் சரிதான். வாசா ஆ 1 கிரயம ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும் முன்பு பிரதிவாதிக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்று ஆவணங்கள் பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றால் தெரிந்துகொண்டேன். பிரதிவாதி வயதான பெண் என்பதால் பேச்சு வார்த்தையின் போது அவரது கணவரும் மகனும் உடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். கிரயம் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால் தான் காலக்கெடு 7 மாதங்கள் குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். பிவாசா 1 வரிசை கையொப்பங்கள் கொண்ட ஆவணமும் வாசா ஆ 1 ஆவணத்திலும் கணினி எழுத்து வடிவம் தயாரித்தவர் சாட்சிகள் மற்றும் சங்கதிகள் 2 பத்தியை தவிர ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரிதான். வாசா ஆ 1 ஆவணத்திற்கான பதிவு செலவு நானே ஏற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களுக்கான முத்திரை தாள்களை நான் வாங்கினேனா என்றால் நான் வாங்கவில்லை. நான் வாங்க சொன்னேன். 20 ரூபாய் முத்திரை தாள் ஒன்று ஆவணம் தயாரித்தவரையே என் பெயரில் வாங்க சொன்னேன். மேற்படி இரண்டு ஆவணங்களையும் ஒருவரே தயார் செய்துள்ளார். ஆவணம் தயார் செய்தவரிடம் வாசா ஆ 1 பதிவு செய்யப்பட்ட ஆவணம் போன்றே பிவாசா ஆ 1 வரிசை ஆவணத்தையும் தயார் செய்துள்ளது பற்றி கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் நான் தான் தயார் செய்தேன் என்று கூறினாரா என்றால் பிவாசா ஆ 1 வரிசை ஆவணத்தை நான் தயார் செய்யவில்லை என்று கூறினார். என்னிடம் காட்டப்படும் பிவாசா ஆ 1 ஆவணத்தில் ஆவணம் தயார் செய்தவர் என்ற இடத்தில் அவர் பெயர் கையொப்பம், தொலைபேசி எண், உரிம எண் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.ஆவணம் தயாரித்தவர் ஆவண எழுத்தர் சட்டத்திற்கு விரோதமாக பிவாசா ஆ 1 ஆவணத்தை தயார் செய்துள்ளதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். ஆவண எழுத்தர் பெயரில் மாவட்ட பதிவாளரிடம் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாசா ஆ 1 ஆவணத்தை தட்டச்சு செய்திருப்பவர் யார் என்று எனக்கு தெரியாது. வாசா ஆ 1 ஆவணத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு நானும் வேலுசாமியும் கணக்கு வைத்துள்ளோமா என்றால் கணக்கு எழுதியுள்ளோம். ஆளுக்கு 1 லட்சம் கொடுத்ததாக

எழுதியுள்ளோம். என்னிடம் காட்டப்படும் வாசா ஆ 4 ஆவணத்தை தயார் செய்வதற்கு வாசா ஆ 1 ஆவணத்தை தயார் செய்தவரை கூப்பிடவில்லையா என்றால் வாசா ஆ 4 ஆவணத்தை பிரதிவாதியே தயார் செய்யப்போவதாக ஒரு ராஜேந்திரன் என்பவர் அலுவலகத்திற்கு என்னை அழைத்தார். ஏற்கனவே வாசா ஆ 1 ஆவணத்தை தயார் செய்தவரிடமே போகலாம் என்று நான் சொன்னேனா என்றால் இல்லை. வாசா ஆ 4 ஆவணத்தில் சாட்சி கையொப்பங்கள் செய்தவர் யாரென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி அழைத்துவந்தார். கிரயம் உடன்படிக்கையின் பாதுகாப்பு கருதி நான் தங்களிடம் பெற்றுக் கொண்ட கையெழுத்து தாள்களை கிரய தேதியில் தவறாமல் ஒப்புவிக்கிறேன் என்று வாசா ஆ 4 ஆவணத்தில் குறிப்பிட நான் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. பிரதிவாதி எழுதி கொடுதத்தார். நான் கொடுக்கும் 2 லட்சத்திற்கு சாட்சி வேண்டும் என்று பிவாசா ஆ 4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்வதற்கு எனது தரப்பில் யாரேனும் அழைத்துக்சென்றேனா என்றால் இல்லை. வாசா ஆ 4 ஆவணத்தில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்யவில்லையா என்றால் இல்லை. பிரதிவாதியின் கணவரும் மகனும் உடன் இருந்தார்களா என்றால் பிரதிவாதியின் கணவர் இருந்தார். அவரை சாட்சி கையொப்பம் செய்யுமாறு கேட்டேனா என்றால் இல்லை. வாசா ஆ 4 ஆவணத்தை எத்தனை நகல் எடுத்தேன் என்றால் 1 நகல் தான் எடுத்தோம். பிவாசா ஆ 4 ஆவணத்தில் காவக்கெடு குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். வாசா ஆ 4 ஆவணத்திற்கு வருவாய் முத்திரைத்தாள் வாங்கியது யார் என்றால் பிரதிவாதியும் அவரது கணவரும் வாங்கவில்லை. மேற்படி ஆவணத்தை எழுதுவதற்கான காரணம் பிரதிவாதி தன்னுடைய அசல் ஆவணங்களை மீட்க முடியவில்லை என்பதால் தான் காலநீட்டிப்பு கேட்டார். கடன் வாங்கியிருப்பதாக சொன்னார்களா என்றால் ஆமாம். எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினார் என்று கேட்டேனா என்றால் இல்லை. கடன் வாங்கியிருப்பதாகவும் அதற்காக் மூலப்பத்திரத்தை ஒப்படைத்திருப்பதாக வாசா ஆ 4 ஆவணத்தில் வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதா என்றால் இல்லை. வாசா ஆ 4 ஆவணத்தை எழுதும்பொழுது மீதித் தொகையை கொடுத்து கிரயம் செய்துக்கொள்ள நான் தயாராக இருந்தேனா என்றால் இல்லை. நாங்களே மீதித்தொகைக்காக கடன் எவ்வளவு என்று கேட்டு பத்திரத்தை மீட்டுத்தருவதாக கேட்டேனா என்றால் இல்லை. வாசா ஆ 4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றாலும் மேற்படி

ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசா ஆ 4 ஆவணத்தை தயார் செய்தவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். இதற்காக மேற்கொண்டு ரூபாய் 2 லட்சம் கொடுத்ததாக வாசா ஆ 4 ஆவணத்தில் குறிப்பிட்டிருப்பது பொய் என்றால் சரியல்ல. இந்த 2 லட்சம் ஆளுக்கு 1 லட்சமாக கொடுத்தாக கூறுவதற்கு கணக்கு வைத்துள்ளோமா என்றால் கணக்கு வைத்துள்ளோம். தாவா சொத்திற்கு கிழபுரம் தென் வடலாக தேசிய நெடுஞ்சாலை செல்கிறது என்றால் ஆமாம். தாவா இடத்திற்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையில் எங்கள் இடம் உள்ளது. அது சுமார் 1 ½ ஏக்கர் உள்ளது. எங்களிருவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். டாஸ்மாக் மற்றும் வணிக நோக்கத்தில தங்கும் விடுதியை வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் ஆமாம். அந்த இடத்திற்கு தெற்கே கொடுமுடி பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு பாதைக்காக நிலம் விட்டுள்ளோம் என்றால் சரிதான். மூல ஆவணம் தங்களிடம் தான் உள்ளது என்று தங்கள் பதில் வழக்குரையுடன் நோட்டரி கையொப்பம் இட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை வீட்டு மனைகளாக மாற்றுவதற்கு நாங்கள் மிகப்பெரிய செலவு செய்துள்ளோம் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது உண்மையா என்றால் அவ்வாறு நான் எதுவும் சொல்லவில்லை. தாவா சொத்தை என்னுடைய இடத்துடன் இணைத்து வீட்டு மனைகளாக மாற்றினால் மிகப்பெரிய லாபம் அடையலாம் என்றால் தாவா சொத்தை நான் விலை பேசினேன் என்றால் இல்லை. அந்த எண்ணத்தில் நான் விலை பேசவில்லை. அதனால் தான் தாவா சொத்தை ரூபாய் 90 லட்சத்திற்கு நான் விலை பேசினேன் என்றால் இல்லை. வாசா ஆ 1 கிரய ஒப்பந்தப்படி 08.04.2017 ம் தேதியுடன் கிரய ஒப்பந்தத்தின் காலக்கெடு முடிவடைகிறது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த தேதி 07.01.2021 என்றால் சரிதான். கோவிட் காலம் 15.03.2020 முதல் 28.02.2022 வரை இருந்தது தெரியும். ஆனால் நான் கோவிட் இருந்த காலத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வயதான பிரதிவாதியை ஏமாற்றி தாவா சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசா ஆ 1 தாவா ஒப்பந்தத்தை நான் கேட்டுக்கொண்டதன் பேரில் என்னுடைய பண சேமிப்புக்காக குறைந்த விலைக்கு எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Copy of Deposition

மறுவிசாரணை:- இல்லை

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P.Sridevi,<br>Subordinate Judge,<br>Kodumudi |